DINAKARAN

3 APR 2022

PAGE 6

புதுவை பல்கலைக்கழகத்தின்

# தொலைதூர கல்வி இயக்குநருக்கு சிறந்த கல்வியாளர் விருது



▶ சிறந்த கல்வியாளருக்கான விருது பெற்ற புதுவை பல்கலைக்கழகத்தின் தொலைதூர கல்வி இயக்குநரகத்தின் இயக்குநர் ராமையா துணைவேந்தர் குர்மீத் சிங்கை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

புதுச்சேரி, ஏப். 3: புதுடெல்லியில் இயங்கி வரும் புதிய கல்வி குறியீட்டு நிறுவனமானது இந்திய அளவில் உயர் கல்வியில் சிறந்த விளங்கும் அதிகாரிகளுக்கும், பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கும் ஆண்டுதோறும் சிறந்த கல்வியாளருக்கான விருதை வழங்கி வருகிறது. இந்த ஆண்டுக்கான விருது புதுச்சேரி பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்ககத்தின் இயக்குநர் பேராசிரியர் ராமையாவுக்கு வழங்கப்பட்டது. புதுடெல்லியில் நடந்த விழாவில் மத்திய அரசின் அகில இந்திய தொழில்நுட்ப கழக தலைவர் அனில் சகஸ்ரபுதே சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இவ்விருதை வழங்கினார்.

புதுச்சேரி பல்கலைக்கழக தொலைத்தூர இயக்ககத்தில் நவீன தொழில்நுட்பங்களை கொண்டு உயர் கல்வி மேம்பாடு, பன்னாட்டு தரத்திலான நவீன இணைய வழியிலான கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் தொலைத்தூர படிப்புகளை இந்தியா மற்றும் அயல்நாடுகளுக்கு கொண்டு செல்லுதல் போன்ற மிக சிறந்த கல்வி சேவைக்காக இந்த விருது பேராசிரியர் ராமையாவுக்கு வழங்கப்பட்டது. 150க்கும் மேற்பட்ட பன்னாட்டு தரத்திலான ஆய்வு கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ள பேராசிரியர் ராமையா இந்திய கல்வியாளர் கழகத்தின் தேசிய துணை தலைவராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

விருது பெற்ற இயக்குநர் ராமையா பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங்கை சந்தித்து வாழ்த்து பெற்றார். தொடர்ந்து பேராசிரியர் ராமையாவை பல்கலைக்கழக புலமுதன்மையர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அதிகாரிகள் மற்றும் ஆய்வுத்துறை மாணவர்கள் என பலரும் வாழ்த்தினர்.